இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 20.12.2025

மிரட்டப் போடப்பட்ட வழக்கு!

சோனியா, ராகுல் ஆகிய இருவரையும் மிரட்டுவதற்காகப் போடப்பட்ட 'நேஷனல் ஹெரால்டு' வழக்கின் குற்றப்பத்திரிக்கையை ஏற்க நீதிமன்றமே மறுத்துவிட்டது. இதன் மூலம் புலனாய்வு அமைப்புகளை தங்களது அரசியல் வேட்டைக்கு பா.ஜ.க. பயன்படுத்தி வருவது நீதிமன்றத்தில் அம்பலம் ஆகி இருக்கிறது.

'நேஷனல் ஹெரால்டு' என்ற வழக்கில் சோனியா, ராகுல் ஆகியோர் மீது கடந்தஏப்ரல்19ஆம்தேதியன்றுடெல்லிசிறப்புநீதிமன்றத்தில்அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. 988 கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாகச் சொல்லி டெல்லி, லக்னோ, மும்பை ஆகிய இடங்களில் இருக்கும் 'நேஷனல் ஹெரால்டு' சொத்துக்களை முடக்கினார்கள். இந்தக் குற்றப்பத்திரிக்கையைத்தான் டெல்லி நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

1938ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவால் பிரிட்டிஷ் இந்தியாவில் தொடங்கப்பட்டது 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிக்கை. 'அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட்' (ஏ.ஜே.எல்.) என்ற நிறுவனத்தின் சார்பில் இந்தப் பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது. நேருவின் மிகக்கடுமையான அரசியல் தலையங்கங்கள் காரணமாக 1942ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியால் இப்பத்திரிக்கை தடை செய்யப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் வந்தது. சுதந்திர இந்தியாவில் பிரதமர் ஆன நேரு, அந்தப் பத்திரிக்கையின் இயக்குநர் குழுவில் இருந்து தனது பொறுப்பை விட்டு விலகினார். ஆனாலும் காங்கிரசு கட்சியின் நிதியின் மூலமாகத்தான் அது செயல்பட்டது. 2008ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. 2016 முதல் இணையப்பதிப்பாக வெளிவந்தது.

2012 ஆம் ஆண்டு சுப்பிரமணியம் சுவாமி, "சோனியா, ராகுல் ஆகிய இருவரும் காங்கிரஸ் கட்சி நிதியைப் பயன்படுத்தி, ஏ.ஜே.எல். நிறுவனத்தைக் கைப்பற்றி அதன் 2,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை அடையும் நோக்கில் செயல்பட்டார்கள்" என்று குற்றம் சாட்டினார். ஆனால் இதன் சொத்துக்களில் இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று காங்கிரஸ் கட்சி விளக்கம் அளித்தது.

"சோனியாவும், ராகுலும் சேர்ந்து 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிக்கையின் சொத்துக்களை அபகரிக்கப் பார்க்கிறார்கள்" என்று சுப்பிரமணியம் சுவாமி சொல்வதை மட்டுமே வைத்து 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு வழக்குப் போட்டது.

"சோனியா, ராகுலுக்கு 'யங் இந்தியா' நிறுவனத்தில் 76 விழுக்காடு பங்குகள் உள்ளன. அவர்களின் மேற்பார்வையில் ஏ.ஜே.எல். நிறுவனத்தின் 2 ஆயிரம் கோடி சொத்துகளை அபகரிக்கும் நோக்கில் அந்த நிறுவனத்துக்கு காங்கிரஸ் கட்சி கடன் அளித்துள்ளது. இந்த விவகாரத்தில் சோனியா, ராகுல் உள்ளிட்டோர் 988 கோடி ரூபாய் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார்கள்" என்று அமலாக்கத்துறை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. குற்றப்பத்திரிக்கையில் காங்கிரஸ் கட்சியின் மறைந்த தலைவர்களான மோதிலால் வோரா, ஆஸ்கர் பெர்னான்டஸ் ஆகியோர் பெயர்களை எல்லாம் சேர்த்தார்கள்.

இவ்வழக்கில் 2014-ஆம் ஆண்டு ராகுல், சோனியா உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் டெல்லி நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. 2015-ஆம் ஆண்டு இவ்வழக்கில் சோனியா, ராகுல் இருவருக்கும் முன் பிணை வழங்கப்பட்டது. 2019- ஆம் ஆண்டு 'நேஷனல் ஹெரால்டு'க்குச் சொந்தமான 16 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துகளை பறிமுதல் செய்ததாக அறிவிக்கப்பட்டது.

2025ஆம் ஆண்டில் இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள். 2014 முதல் 2025 வரையிலான 11 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சியை மிரட்டுவதற்காக மட்டுமே 'நேஷனல் ஹெரால்டு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"ஜவஹர்லால் நேரு எங்களுக்கு அரசியலை மட்டும் கற்றுத் தரவில்லை. அச்சத்தை எதிர்கொள்ளவும், உண்மையின் பக்கம் நிற்கவும் கற்றுத் தந்தார்" என்று ராகுல் சொல்லி வந்தார். ஆனாலும் இந்த வழக்கை வைத்து சோனியாவையும் ராகுலையும் பா.ஜ.க. அரசு மிரட்டி வந்தது.

நீதிமன்றத்தில் தொடக்கம் முதலே அடி வாங்கி வந்தது அமலாக்கத்துறை. கடந்த ஏப்ரல் 26ஆம் தேதியே நீதிபதி அமலாக்கத்துறைக்கு எச்சரிக்கை விடுத்தார். "நேஷனல் ஹெரால்டு வழக்கு தொடர்பாக சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோருக்கு எதிராக நோட்டீஸ் எதுவும் இப்போது பிறப்பிக்க முடியாது.

ஏனெனில் இந்த விவகாரம் தொடர்பாக அமலாக்கத்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையில் போதிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் இல்லை. முதலில் விடுபட்ட ஆவணங்களை அமலாக்கத்துறை தரப்பில் இருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள். அதன் பின்னர் அதனை ஆய்வு செய்து முடிவெடுக்கலாம். எந்த ஒரு உத்தரவாக இருந்தாலும் அதில் குறைபாடு உள்ளதா என்று நீதிமன்றம் கண்காணிக்க வேண்டும். அது எங்களது முக்கிய கடமை ஆகும். எனவே இந்த வழக்கில் நாங்கள், அதாவது நீதிமன்றம் திருப்தி அடைவதற்கு முன்னதாக நோட்டீஸ் பிறப்பிக்க முடியாது" என்று திட்டவட்டமாக நீதிபதி தெரிவித்தார். அதன்பிறகும் ஆதாரம் எதையும் அமலாக்கத்துறை தரவில்லை.

அமலாக்கத்துறையின் அரசியல் நடவடிக்கையை நேற்றைய தினம் டெல்லி நீதிமன்றம் உடைத்துவிட்டது. "இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக காவல் துறையின் முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் அல்லாமல் சுப்பிரமணியம் சுவாமி என்ற தனி நபர் அளித்த புகாரின் அடிப்படையில் அமலாக்கத்துறை விசாரணை மேற்கொண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதை அனுமதிக்க முடியாது" என்று டெல்லி நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

"ஏற்கனவே இந்த வழக்கை டெல்லி காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவு விசாரித்து வருகிறது. இந்தச் சூழலில் அமலாக்கத்துறையின் வாதங்களின் அடிப்படையில் இந்த விவகாரத்தை விசாரிப்பது என்பது முன்கூட்டியே அவசரப்படுவதாக அமையும்" என்று சொல்லி அமலாக்கத் துறையின் குற்றப்பத்திரிக்கையை டெல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் கோன்னே மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

மோடி அரசாங்கத்தின் சட்ட விரோத நடவடிக்கைகள் இதன் மூலம் அம்பலம் ஆகிவிட்டது. புலனாய்வு அமைப்புகளை தங்களது அரசியல் தீய நோக்கத்துக்குப் பயன்படுத்தியது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

அரசியல் எதிரிகளைப் பழிவாங்க எதையும் செய்வோம் என்ற ஆணவத்துக்கு அடி கொடுத்துள்ளது டெல்லி சிறப்பு நீதிமன்றம்.

●●

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் 25.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.12.2025) தலைமைச் செயலகத்தில், இலங்கை நாட்டின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய கட்சித் தலைவர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா, ஜனநாயக இலங்கை தமிழ் அரசு கட்சித் தலைவர் கே.வி.தவராசா, தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுதுரை ஐங்கரநேசன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி செய்தித் தொடர்பாளர் கனகரத்தினம் சுகாஷ், தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், கொள்கை பரப்புச் செயலாளர் நடராஜர் காண்டீபன் ஆகியோர் உடனிருந்தனர்.

'மகாத்மா காந்தி' பெயரை மாற்றிய - ஒன்றிய அரசைக் கண்டித்து

டிச. 24-ல் தி.மு.க. கூட்டணி நடத்தும் ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்வீர்!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, டிச.20- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் பெயரிலிருந்து தேசத்தந்தை மகாத்மா காந்தி பெயரை நீக்குவதற்கு நரேந்திர மோடி அரசு நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்திருப்பது கடும் கண்டனத்திற்கு உரியதாகும்.

இந்த திட்டத்தின் பெயரை, 'விக் ஷித் பாரத் கேரன்ட்டி பார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் (கிராமின்) (விபிஜி ராம்ஜி)' என பெயர்மாற்ற ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், நரேந்திர மோடி அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டத்தின் நோக்கத்தை சிதைத்து கோடிக்கணக்கான ஏழை மக்களை வயிற்றில் அடிக்கும் வகையில் திட்டத்தையே நீர்த்துப் போகச் செய்ய முயற்சிக்கிறது.

ஏழை எளிய மக்கள் வாழ்வாதாரமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தையே சிதைத்து இருக்கிற ஒன்றிய அரசை கண்டித்து தமிழ்நாட்டில் டிசம்பர் 24-ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒன்றிய தலைநகரங்களில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டு அறப்போராட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் - பல்லடம் தொகுதியில்

"வெல்லும் தமிழ் பெண்கள்" தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு!

மாநில மகளிர் அணி – தொண்டர் அணி செயலாளர்கள் ஜெ. ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.ராணி அறிக்கை!

திருப்பூர், டிச. 20 –

மாநில மகளிர் அணி – தொண்டர் அணி செயலாளர்கள் ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி நாமக்கல் ப.ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பூர் மாவட்டம் பல்லடம் தொகுதியில் வரும் டிசம்பர் 29ஆம் தேதி மாலை 4 மணிக்கு "வெல்லும் தமிழ் பெண்கள்" தி.மு.க. மகளிர் மாநாடு ஒன்றை லட்சம் மகளிர் திரளும் பிரம்மாண்ட மாநாடாக 10,000 வாக்கு சாவடியில் இருந்து ஒரு வாக்குச்சாவடிக்கு 15 மகளிர் என இலட்சக்கணக்கான மகளிர் கலந்து கொள்ளும் பிரம்மாண்ட மாநாட்டை நடத்திட அனுமதி வழங்கிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,

மகளிரணி மாநாட்டை தலைமையேற்று சிறப்பிக்க இருக்கின்ற கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கும், தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டை பொறுப்பேற்று சிறப்பாக செயல்படுத்த இருக்கின்ற மேற்கு மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், தி.மு.க. மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு, வலைதள குழு ஆலோசனை குழு சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து செயல்படுத்த இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, கழக நிர்வாகிகளுக்கும் எங்களுடைய நன்றிகள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டின் நவீன சிற்பி தமிழினத் தலைவர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசில் தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் எந்த கோரிக்கை வைக்காமலே 1.31 கோடி மகளிருக்கு கலைஞர் உரிமைத்தொகை, கட்டணம் இல்லா விடியல் பயணம், கல்வி

கற்கும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், வேலை செல்லும் மகளிர்க்கு பாதுகாப்பான தோழி விடுதி, மக்களை தேடி மருத்துவம், பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 50%,

இந்தியாவிலேயே அதிக அளவாக 43% வேலைக்கு போகும் பெண்களை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என இந்தியாவின் மற்ற மாநில பெண்கள் எல்லோரும் வியந்து பார்க்கும் வகையில் தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தமிழ் நாடு பெண்களை தலை நிமிர்ந்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என "திராவிட மாடல்" ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லும் விதமாகவும் கழக அரசிற்கு பெருமை சேர்க்கும் வெல்லும் தமிழ் பெண்களாகவும் தி.மு.க. மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கழக மாவட்டங்களில் உள்ள மகளிர்கள் மீண்டும் 2026 ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திட தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் அலைகடல் என ஆர்ப்பரித்து திரண்டு வாரீர்! மாநாட்டை வெற்றி பெற செய்வீர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்கான நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில், இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு உட்பட்ட நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்கான புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிளை, வார்டு மற்றும் பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 20.12.2025 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில், நாகப்பட்டினம், தளபதி அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 18.12.2025